**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 138/2022**

**வா.சா.1 – திலகவதி**

**04-11-2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரதிவாதி முத்து குமார் எனது பக்கத்து பங்குதாரர். அவர் எனது உறவினரா என்றால் பங்காளி. அவர் மீது என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பாகத்தை அளந்து கம்பிவேலி போடுவதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் பாட்டேய கவுண்டருக்கு பாத்தியப்பட்டதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது சொத்து காலை 385/1 பி என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எனது பூமியின் கிழபுறம் பூமி உள்ளது என்றால் சரிதான்.

2. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டபோது எனது பூமி அளந்து கல் நடப்பட்டு இருந்தது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு எங்கள் எல்லையை நிர்ணயம் செய்தபிறகு பிரதிவாதி இடையூறு செய்வதில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட பூமியை எவ்வித இடையூறும் இன்றி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி அத்துமீறி நுழைந்து எல்லையை சேதப்படுத்தியதாக பொய்யாக சொல்லிகிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் வழக்குமூலம் இல்லாததால் தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.04 11:48:07 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.